Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

# கலைமகள்

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

| | | |
|---|---|---|
| வெண்டாமரை ௧ | 1913-ம் ஆகஸ்டு-மீ | இதழ் ௭. |



பத்திராதிபர் :— சி. பங்காருப்பத்தர்

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புது

| | |
|---|---|
| வருஷ சந்தா ரூ 1 | வெளிநாட்டிற்கு ரூ |
| தபாற் கூலி அணா 4 | தனி சஞ்சிகை அ |

புதுவை வித்தியாபிவர்த்தனி அச்சுக்

## உள்ளுறை.


| | பக்கம். |
|---|---|
| கடவுள்:— பத்திராதிபர் ... ... ... ... | 1 |
| புதுவையும் தண்ணீர்க்குழாய்களும்:— பரதேசவாசி ... | 5 |
| ரமணி:— (ஓர் சிறிய காதற்கதை) ஸ்ரீமத் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. ... ... ... ... ... | 7 |
| திராவிட வித்தியா விநோத விடுகதை வினாவிடை:— ஸ்ரீமத் மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநிஸ்தலம். ... ... | 10 |
| மணிமேகலை:— பத்திராதிபர். ... ... ... ... | 12 |
| மயிலச்சிலேடை வெண்பா:— ஸ்ரீமத் வித்வான் பு. அ. பெரிய சாமிப்பிள்ளை. ... ... ... ... ... | 16 |
| மங்கலம்:— வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர சுப்பைய சுவாமிகள். ... ... ... ... ... ... | 17 |
| நியாயமாலா:— ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சிபுரம். ... ... ... ... ... ... | 18 |
| சுஜனசம்வாதம்:— ஸ்ரீமத் ஆ. செங்கல்வாராயமுதலியார், காஞ்சிபுரம். ... ... ... ... ... ... | 19 |
| சுவிவேக தர்ப்பணம்:— பத்திராதிபர். ... ... ... | 20 |
| வைத்தியக்குறிப்புகள்:— ஸ்ரீமத் மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்; பழநிஸ்தலம். ... ... ... ... | 22 |
| சமாசாரம். ... ... ... ... ... ... | 23 |


---

"கலைமகள்" என்னும் பெயரிய இப்பத்திரிகை கல்வி, அறிவு, ஒழுக்கம், இலக்கியம், இலக்கணம், தர்க்கம், பக்தி, ஞானம் முதலிய இன்றியமையாத பல விஷயங்கள் தக்கவர்களா லெழுதப் பெற்று மாதந்தோறும் வெளிவரும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளும், வேதாந்த பாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர. சுப் பையசுவாமிகளும் இதற்கு விஷயதானம் செய்துவருவதாக வாக் ...ரித்தருளினர்கள்.

இது அதிக பொருட்செலவிற் பிரசுரிக்கப்படினும், தமிழ் ...சி கருதி, மிகக்குறைந்த விலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. ... பெற விரும்புவோர் பத்திராதிபருக்கெழுதி வி. பி. தபால் ... பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ ஜுலை மீ [இதழ் - எ

## இலௌகிகப் பகுதி.

### கடவுள்.

(புதுவைக் கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவத்தில் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.)

ஐயன்மீர்!

யான் இன்று உபந்நியசிக்க எடுத்துக்கொண்ட விஷயம் கடவுள் என்பது. கடவுளைப்பற்றி யான் அதிகமாகத் தெரிந்தவனென்றும், கடவுட்டன்மையை உங்கள் முன்னர் எடுத்துப் பிரசங்கித்துக்கனம்பெறலாமென்றும் கருதிவந்தவனல்லேன். ஏனெனின், கல்வியிலும் அறிவினும் யான் மிகச் சிறியவனென்பதும், பிரசங்கம்செய்யும் ஆற்றல் எனக்குச் சிறிதுமில்லையென்பதும் எனக்கே நன்றாகத் தெரியும். ஆயினும் அக்கிராசனமமர்ந்து இம்மகாஜன சபையை அலங்கரித்தருள்கின்ற கலைக்கடலாக விளங்கும் நமது ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் இட்டருளிய கட்டளையை மேற்கொண்டவனாதலின், அம்சம்போன்ற குணக்கிராகியர்களாகிய உங்கள் முன்னர் என் சிற்றறிவிற்கெட்டியவாறு சில விஷயங்களைச் சொல்லத் துணிகின்றேன்.

கடவுள் என்பது பகுதி விகுதி என்னும் இரண்டுறுப்புக்களான் முடிந்த ஒரு தொழிற்பெயர்ப் பகுபதம். கட-பகுதி, உள்-தொழிற் பெயர் விகுதி. கடத்தல் என்பது இச்சொற்குப் பொருளாகும். கடத்தல் என்னும் பொருளையுடைய கடவுள் என்னும் தொழிற் பெயரானது ஆகு பெயராகி எல்லாவற்றையுங் கடந்து நின்ற ஓர் பரம்பொருளைக் குறிக்கும். அதுதான் தெய்வமென்றும், ஈசுரனென்றும், பிரமமென்றும் இன்னும் பல்வேறு நாமங்களாகச் சாத்திரங்களில் பிரதிபாதிக்கப்படுகின்றது. சருவஞ்ஞத்துவம், சருவேச்சுரத்துவம், சருவநியந்திருத்துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகற்பிதத்துவம், சருவசத்தித்துவம் என்பவைகளே கடவுளுக்குமுக்கியகுணங்களென்று சொல்லப்படுகின்றன. சருவஞ்ஞத்துவமாவது எல்லாவற்றையுமறியுந்தன்மை. சருவேச்சுரத்துவமாவது எல்லாவற்றிற்கு மேலாயிருக்குந் தன்மை. சருவ நியந்திருத்துவமாவது எல்லாவற்றையும் ஏவவல்லனுந்தன்மை. சருவாந்தரியாமித்துவமாவது எல்லாவற்றிலும் வியாபித்திருக்குந் தன்மை. சருவகற்பிதத்துவமாவது எல்லாவற்றையு நியமிக்குந் தன்மை. சருவசத்தித்துவமாவது எல்லா வல்லமையுமுடையனுந் தன்மை. இங்ஙனம் சருவஞ்ஞத்துவாதி குணங்களையுடைய அக்கடவுளே உலகத்திற்குக் காரணமென்று சுருதிகள் முறையிடுகின்றன.

இருக்கட்டும்; கடவுள் உண்டென்று சாத்திரங்களில் எழுதி வைத்திருப்பதைவிடப் பிரத்தியட்சமாகக் கண்டவர்கள் ஒருவருமில்லையே, கடவுள் இருப்பது உண்மையாயின் என் கண்ணுக்குப் புலனாகக்கூடாது? பிரத்தியட்சமில்லாத ஒரு பொருள் உண்டென்பதை நாம் நம்புவதெப்படி? என்று சிலர்க்கு ஆசங்கையுண்டாகலாம். இப்படிச் சங்கிப்பவர்கள் கண்ணாற் கண்டதைமாத்திரம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்னுங்கருத்தையுடையவர்களாதலின் இவர்களிடத்து நாம் சில கடாக்களையேவி இவர்களை வழிப்படுத்திப் பின்னர் அதற்குச் சமாதானம் கூறுவோம்.

"காற்று என்னும் ஓர் பொருள் நம் கண்ணிற்குப் புலனாவதில்லையே, அது உண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றோமா இல்லையா? நமது மூன்றும்பாட்டன் நான்காம்பாட்டன் முதலியவர்களை நாம் கண்ணாற் கண்டதில்லையே அப்போது அவர்கள் இல்லையென்று சொல்லமுடியுமா?"

இங்ஙனம் இவ்வினாக்களை நாம் விடும்போது அவர்கள் காற்றையும், மூன்றாம்பாட்டன் நான்காம்பாட்டன் முதலியவர்களையும் கண்ணாற் பார்க்கவில்லையாயினும் இல்லையென்று சொல்லமுடியாதவர்களாய், காரியத்தைக்கொண்டு காரணத்தை உள்ளதென்று கொள்ளல்வேண்டும் என்று கூறுவாரானபடியினாலே, அப்போது அவர்கள் கண்ணாற் காணாததையும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றவர்களாய் விடுகின்றார்கள். ஆகவே கடவுளின் உண்மையை இப்போது விசாரிப்பது எளிதாக முடியும்.

உலகத்திற் பொருள்களை யறிவதற்குச் சாத்திரங்களில் அஷ்டவித பிரமாணங்கள் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம், சம்பவம், அபாவம், ஐதிகம் என்பன. இவற்றை ஒன்றிலொன்றடக்கிச் சில குறைத்துக் கூறுவதுமுண்டு. இப்போது இப்பிரமாணங்களையெல்லாம் விசாரிக்கவேண்டிய அவசரம் நமக்கு நேரவில்லை. இங்கு நமக்கு வேண்டுவது முக்கியமாக அனுமானப் பிரமாணம் ஒன்றே. அனுமானப்பிரமாணமாவது காரியத்தைக்கொண்டு காரணத்தையறிதல். அதாவது ஓரிடத்துப் புகை காணப்படுமாயின் அவ்விடத்துள்ள நெருப்பு நம் கண்ணுக்குத் தோற்றாவிடினும் அப்புகையைக்கொண்டு அந்நெருப்பையறிதல்போலாம். இவ்வநுமானப் பிரமாணத்தைக்கொண்டே கடவுளின் உண்மையை நாம் உணரவேண்டும். எங்ஙனமெனின்,

பல்வேறு வகைப்பட்ட விசித்திரங்களாயுள்ள இவ்வுலகமானது தோன்றி நின்று அழியுங் காரியமாயுள்ளது. "காரணம் விநா கார்யம் நோதேதி" என்றபடி காரணமின்றிக் காரியம் நிகழமாட்டாது. இது எவரும் மறுக்கமுடியாதவிஷயம். ஆகவே இவ்வுலகம் தோன்றிநின்று அழிதற்குக் காரணமாக ஒரு முதற்பொருள் இருத்தல்வேண்டும். நிர்மானுஷ்யமான காட்டினிடத்தே ஓர் வீடு காணப்படுமாயின், அது கட்டினவனை நாம் பார்க்காவிடினும் அக்கட்டடத்தைக்கொண்டு அது கட்டினவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று தீர்மானிப்பதுபோலவும், ஒரு சுவரினிடத்துக் காணப்படும் சித்திரத்தைக்கொண்டு அதை எழுதினவன் இருந்தேதீரவேண்டுமென்று நிச்சயிப்பதுபோலவும் தோன்றிநின்று அழியுங் காரியமாகவுள்ள இவ்வுலகத்தைப் படைத்தற்கர்த்தா

அழிக்கவல்ல ஒரு முதற்பொருள் இருந்தே தீரவேண்டுமென்பதை நாம் ஒப்பியே தீரவேண்டும். உலகத்திற்குக் காரணமாயுள்ள இம் முதற்பொருளைத்தான் நாம் கடவுள் என்று கூறுவது.

நல்லது, தோன்றி நின்று அழிவது உலகத்திற்கு இயற்கையே யென்றால் வரும் குற்றமென்னை? இதற்கு ஏன் ஓர் தலைவனை ஒப்ப வேண்டும்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்கும் நாம் சமாதானம் கூறிவிட்டுப் பின்னர் எடுத்த விஷயத்தில் இனிது புகுவோம்.

உலகமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது பஞ்ச பூதங்களோ சடப் பொருள்கள். அதாவது அறிவில்லாப் பொருள்கள். இது யாவரும் அறிந்த விஷயம். ஆகவே அறிவுடைய ஒருவனாலன்றி அவைகள் தாமே தோன்றி நின்று அழிதலென்பது கூடாத காரியம். தனித் தனியிருந்த பஞ்சபூதங்கள் ஒன்று சேர்தற்கு அவற்றைக் கூட்ட வல்ல பொருள் வேறொன்றிருத்தல்வேண்டும். அங்ஙனமன்றிக் கூடுதலாகிய குணம் அவற்றிற்கு இயல்பேயுள்ளதென்று கொள்வோமேயெனின், அங்ஙனம் கூடிய பூதங்கள் பின்னர்ப் பிரிதல் கூடாது. பிரிந்துபோதலை அதாவது ஒவ்வொரு பொருளும் அழிந்துவிடுதலை நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கின்றோம். ஆதலின் அது பொருந்தாது. இனிக் கூட்டும் இயல்பினையுடைய பூதம் கூட்டுமெனற்கும் பிரிக்கும் இயல்பினையுடைய பூதம் பிரிக்குமெனற்கும் வரும் இழுக்கென்னையோவெனின், கூட்டலும் பிரித்தலுமாகிய இரண்டு குணங்களும் ஒன்றற்கொன்று தம்முள் விரோதமுடையனவாதலின், கூட்டுமியல்பினையுடைய பூதம் கூட்டும்போதே பிரிக்குமியல்பினையுடைய பூதம் கூடவொட்டாது பிரிக்கும். பிரிக்கும் இயல்பினையுடைய பூதம் பிரிக்கும்போதே கூட்டும் இயல்பினையுடைய பூதம் பிரியவொட்டாமற் கூட்டும். விருத்த தருமப் பொருள்கள் இரண்டு ஒன்று சேர்தலும் அநுபவ விரோதமாதலின் அதுவும் பொருந்தாது. ஆதலின் இன்னோரன்ன நியாயங்களால் உலகம் தானே உண்டானதென்பது மறுக்கப்பட்டு இதனை ஆக்கவும் அழிக்கவும் வல்ல ஒரு தலைவன் வேண்டுமென்பது பெறப்பட்டது. அவனே சுருதி மிருதி இதிகாச புராணங்களில் பிரமமென்றும் பரசிவமென்றும் நாராயணனென்றும் இவை

முதலாகப் பல நாமங்களானும் பிரதிபாதிக்கப்படுகின்ற முற்றறிவு பேராற்றல் முதலிய குணங்களையுடைய முழுமுதற்கடவுளென்க.

(தொடரும்.)

பத்திராதிபர்.

---

## புதுவையும், தண்ணீர்க்குழாய்களும்.

ஐயன்மீர்!

யான் சுமார் எழெட்டு வருடங்கட்கு முன் புதுவையைக் கண்ணுற்ற போது குடிஜலவசதி மிகக் குறைவாயிருந்தது. புதுவைக்குச் சுமார் ௩-மைல் தூரத்திலுள்ள ஒரு கிணற்றுச் சலமே அவ்வூரின் குடிஜலவசதிக்கென் றேற்பட்டிருந்தது. அதனால் அப்புதுவையில் ௫ - ௬ இடங்களில்மாத்திரம் அதாவது பெரியக்கடைத் தெருவிலிருக்கும் மணிக்கூண்டிலும், வீராவளித் தெருவில் இரண்டொரு இடங்களிலும், ஐரோப்பியர் வீதியில் ஒரு இடத்திலும், கலவை - சுப்பராயசெட்டியார், சின்னசாமிசெட்டியார் இவர்கள் சத்திரங்களிலும் மாத்திரமே தண்ணீர்க்குழாய்களமைக்கப்பட்டிருந்தன.

இதனால் நல்ல தண்ணீர்க்காகச் செல்லும் குடும்பஸ்திரீகளும் புருடர்களும் அக்குழாய்களிடத்தில் கூட்டங் கூட்டமாய் நின்று நெடுநேரங் காத்திருந்து ஒருவர்பேரிலொருவர் விழுந்து மிகு கஷ்டப்பட்டுத் தண்ணீர் பிடித்துக்கொண்டு சென்றிருந்தார்கள். தங்களினும் ஆசாரக்குறைவுடையாராகத் தம்மால் மதிக்கப்பட்ட ஜனங்களைத் தொட்டுக்கொள்ள மனமில்லாத சிலர் நெடுநேரங் காத்திருந்தும் பயன்படாமையால் சும்மா வீட்டுக்குத் திரும்பிச் செல்வதையும் யான் அக்காலத்துக் கண்டேன்.

இவ்வண்ணம் ஜலவசதியால் குறைபாடுற்றிருந்த அப்புதுவைமாநகரமானது இப்போது மற்ற எந்நகரங்களினும் குடிஜலவசதியால் சிறந்து விளங்குகின்றது. சென்னை முதலிய நகரங்களில் அநேக விடங்களில் சில சமயங்களில்மாத்திரம் ஜலம் வருவதாயிருப்பதால் பல கஷ்டங்களுண்டாகின்றன. புதுவையிலோ எவ்விடங்களிலும் எச்சமயங்களிலும் தங்குதடையின்றி ஜலம் வந்துகொண்டே இருக்கின்றது. இதனால் நான் முன்னால் கண்டபோதுளதாகமேலேகூறிய குறைகளொன்றேனும் இல்லாமல் யாவரும் ஜலவசதியை முட்டின்றிப் பெற்றனுபவித்துவருகின்றனர். முக்கியமாய் வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு நிரம்ப சௌகர்யமேற்பட்டுவிட்டது. ஆயினும் ஒரு விஷயமாத்திரம் கவனிக்கத்தக்கது. அஃதியாதெனில்,

ஒவ்வொரு தண்ணீர்க்குழாயமைக்கப்பட்டுள்ள விடத்திலும் சிந்துகின்ற தண்ணீரானது அங்கங்கும் தங்குவதால் சேறாய்க் கொசுகு கிருமி முதலிய சுகக்கேட்டை விளைவிக்கும் ஜந்துக்களால் நிரம்பி வீதியில் செல்பவர்கட்குப் பார்ப்பதற்கும் மிக அருவருப்பையுண்டாக்கி, சுவாசிக்கும் வாயுவையும் அசுத்தப்படுத்திச் சுகக்கேட்டையுண்டாக்கிக்கொண்டிருக்கின்றது. இதை அவ்வூர் சுகாதாரங்களைக் கவனித்துச் சீர்ப்படுத்தவேண்டிய அதிகாரிகள் கவனியாதிருப்பது பொது ஜனங்களின் நிர்ப்பாக்கியமேயாகும். அவர் என் செய்வர். அதிகாரிகள் வசிக்கவேண்டிய காரியங்கள் பல. அவற்றில் அவர்களின் முயற்சிக்கு விஷயங்களாய் நேருங் காரியங்கள் ஜனங்களின்பிரயத்தனத்தையும் அதிருஷ்டத்தையும்பொறுத்தவைகளாயிருக்கின்றன. பிரயத்தனம் அதிருஷ்டம் என்னும் இரண்டனுள்பிரயத்தனம் சிறந்ததாம். அதிருஷ்டம் என்பது ஊழ் எனப்படும். பிரயத்தனம் என்பது முயற்சி. ஊழினும் முயற்சி எவ்வாறு சிறந்ததென்பதைப்பற்றி இங்கு விரிக்கின் மற்றொன்று கூறலாய் முடியுமாதலின் அதைப்பற்றிச் சமயம் நேர்ந்துழிவிரிப்பாம். ஆயினும் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கேற்ப "ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றித் தாழா துஞற்றுபவர்" என்னும் திருக்குறளைமாத்திரம் ஞாபகப்படுத்தி மேலே செல்வாம். இங்ஙனம் அதிருஷ்டத்தினும் சிறந்தமுயற்சியைப் புதுவைவாசிகளாகிய பொதுஜனங்கள் மேற்கொள்ளலவசியம். மனிதர்களின் ஜீவனத்துக்கு முக்கியமானவைகளுள் ஜலமும் வாயுவும் மிகு முக்கியமானவை. அவற்றுள்ளும் வாயு வெகு முக்கியமானது. எப்படி ஜல சரங்களாகிய மீன் முதலிய பிராணிகளுக்கு ஜலம் முக்கியமோ, அப்படியே நமக்கு வாயு முக்கியமாம். நாம் ஜலமின்றிச் சில நாள் ஜீவித்திருக்கலாம். காற்றின்றிச் சில நிமிஷங்கூட ஜீவித்திருக்க முடியாது. ஆனதால் அப்படிப்பட்ட காற்றைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டியது வெகு முக்கியமானதென்பது யாவர்க்குந்தான் சம்மதமாயிராது. அப்படியே குடிஜலமும் பரிசுத்தமாகவேயிருத்தல்வேண்டும். குடிஜலம் சுத்தமாயிராமையினாற்றான் காலராமுதலிய கொள்ளை வியாதிகளுக்குச் சனங்களிரையாகின்றனர். புதுவையில் தண்ணீர்க்குழாய்களுக்கருகே சிந்தும் ஜலத்தாலாகிய சேற்றினால் குடிக்கிற ஜலமும், சுவாசிக்கும் காற்றும் அசுத்தமாய்விடுகின்றன. தண்ணீர்க்குழாய்களினருகே தங்கும் சேற்றிலுண்டாகும் கண்ணிற்குப் புலப்படா மிக நுண்ணிய கிருமிகள் தண்ணீர்க்கான்களில் படிந்து தண்ணீர் பிடிக்கும்போது குடி ஜலத்தில் சம்பந்தப்பட்டு ஜலத்தை அசுத்தப்படுத்துகின்றன. சேற்றிலிருந்துண்டாகும் துர்க்கந்தமானது சுவாசிக்கும் வாயுவை அசுத்தப்படுத்துகின்றது. ஆகையால் இவ்விஷயத்தில் நஷ்டப்படும் ஜனங்கள் அக்கறையுடையவர்களாய்ச் சுகாதாரக்கண்காணிப்பு அதிகாரிகளுக்குப் பன்முறையும் விண்ணப்பங்களெழுதியனுப்புதல்மாத்திரத்தோடு நில்லாமல் தக்காருடன் நேரிலும்

போய்ச் சொல்லிக்கொண்டு இன்னும் உரிய பிரயத்தனங்களியாவற்றை யும்செய்தல்வேண்டும். இவ்வாறு முயன்று பயன்படாதபோதலரிது. “ முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ”

அன்பர்களே, இச்சமயத்தில் இச்சுகாதாரக்கேட்டை எவ்வகையால் நிவர்த்தித்துக்கொள்ளலாமோ அதில் எனக்குத்தோன்றியதோர் ஆலோச னையையும் எழுதாதிருக்க என்னால்முடியவில்லை; ஆனதாலதையும் எழுது கின்றேன். சில சமயம் நான் எழுதுவது எனதறியாமையை வெளிப் படுத்துவதாயிருந்தபோதிலும், அறிவுடைய மற்றையர்க்குத் தோன்றக் கூடிய வேறு உபாயங்களை அவரவர்கள் வெளியிடுதற்குத் தூண்டுகோலாக வாவது எனது ஆலோசனை உபயோகப்படுமன்றோ!

ஒவ்வொரு தண்ணீர்க் கான்களிடத்தும் சிந்துகின்ற ஜலமானது, இந்துக்கள் வீதிக்கும் ஐரோப்பியர் வீதிக்கும் இடையேயுள்ள பெரிய வாய்க்காலில் போய் விழும்படி ஒவ்வொரு கான்களிடத்திருந்தும் சிறு வாய்க்கால்கள் ரோட்டுகளில் பூமிக்குள் மறைவாயமைத்து, அப்படி அமைக் கப்பட்ட கால்வாய்களின் வழியாய்ப்போய் விழும் ஜலமானது அப் பெரிய வாய்க்காலில் விழுந்து அங்குத் தங்கிப் பெரியதோர் சுகக்கேட்டை விளை விக்காவாறு, அப்பெரிய வாய்க்காலில் மிகப்பெரிய குழாயொன்று அமைத்து அக்குழாயில் சிறுகால்வாய்களால்சென்றுவிழும்ஜலத்தைப் புகச் செய்து அப்பெரிய குழாயில் விழும் ஜலத்தை ஊர்ப்புறத்தில் சமுத்திரத் தில் போய்விழும்படி செய்தால் இப்போதுள்ள சுகாதாரக்குறை நீங்கும். இதுவே எனக்குத் தோன்றிய சூழ்ச்சியாம். விவேகிகளுக்கு இதனினும் சிறந்த ஆலோசனை தோன்றக்கூடும். எங்ஙனமாவது சுகாதாரம் பெருக வேண்டுமென்பது கருத்தாம். இதனை விவேகிகள் கவனிப்பாராக. சுபம்.

பரதேசவாசி.

---

# ரமணி.

## ஓர் சிறிய காதற் கதை.

### அத்தியாயம் - ௨.

பாலிய பருவத்தில் சாவித்திரியும் ரமணியும் ஒரே பாடசாலை யிற் கல்வி பயின்றவர்கள். ஒன்றாய்க்குலவி விளையாடிக் களித்தவர்கள். ஜனார்த்தனனிடமிருந்து ஒன்றாய்ச் சங்கீதம் பயின்று ஆநந்தித்தவர்கள். ஒருதாரத்திலுதித்த உத்தம சோதரிகளும் மன்னுதற்கரிய உத்தம அன் புடைய உயிர்த்தோழியர்கள். ஆனால் சாவித்திரி தன் உள்ளத்திலுள்ள ஒரே ஒரு ரகஸ்யத்தைமாத்திரம் தன் மித்திரிக்குரையாதொளித்தாள்.

ரமணியோ, தன் தோழி தனக்குக் கூறாதொளித்த ரகஸ்யத்தைத் தான் அறிந்திருந்தபோதிலும், தான் அவ்வாறு அறிந்திருத்தலாகிய ரகஸ்யத்தைச் சாவித்திரிக்குச் சாற்றாதொளித்தாள். அன்பென்னும் அற்புத பாசத்தாற் பந்தப்பட்டுள்ள இவ்விரு கன்னிகைகளும் இவ்வாறு தங்கள் ரகஸ்யங்களை ஒருவர்க்கொருவர் உரையாதிருத்தலால், அவர்கள் ஒவ்வொருவர் அகத்திலும், "சொல்லிவிடு சொல்லிவிடு" எனச் சொல்லும் அவாவும், "சொல்லாதே சொல்லாதே" எனச் சொல்லும் அச்சமும், கடும் போர் புரிந்து கொண்டிருந்தன. ஆனால் எத்தனை நாள் இப்பேதைகள் தங்கள் நெஞ்சங்களில் நிகழும் யுத்தங்களைச் சகித்துக்கொண்டிருப்பார்கள்? முதன் முதல் ரமணியின் உள்ளத்தில் ஆசையே வெற்றியுற்றுவிட்டது. யுத்தமுமடங்கிற்று. ஆகையினாற்றான் அவள் தன் அன்னையை நோக்கி "நான் சாவித்திரியைப் பார்த்து வெகு நாளாயிற்றம்மா. அவசியம் இன்றிரவு நீ என்னை அவள் வீட்டிற்கு அழைத்துப்போகவேண்டும்" என்றனள். அவள் தோழியின் உள்ளத்திலோ போர் இன்னும் ஓயவில்லை. அன்றியும் அந்த யுத்தகளத்தில் சில தினங்களாக ஓர் எரிமலையும் சண்டப்பிரசண்டமாய்ப் பொங்கிக்கொண்டிருக்கிறது. என்செய்வாள் சாவித்திரி! யுத்தத்தின் கொடுமை! எரிமலையின் உக்கிரம்! அநிச்ச மலரன்ன மென்மைவாய்ந்த அவளது நெஞ்சம் ஸர்வ குழப்பமாய்விட்டது. தன் மித்திரி அக்குழப்பத்தைச்சிறிது தணிப்பாளெனக் கருதியே அவள் ரமணியை அழைத்து வருமாறு தன் அன்னையை அனுப்பினாள்.

ருக்மணியம்மாள், தான் அவசியம் அன்றிரவே ரமணியைத்தன் அகத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பங்கஜவல்லியம்மாளுக்குப் பற்பல விதமாக வற்புறுத்திக் கூறினாள். ரமணியும் தான் மறு நாள் இரவே தன் வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுவதாகச் சொல்ல, பங்கஜவல்லியம்மாளும் தன் புத்திரி சாவித்திரியைப் பார்க்கச்செல்ல உத்தரவளித்துவிட்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு இவ்விஷயத்தை அறிந்த ஜனார்த்தனன் ரமணியைத் தனிமையிற் கண்டு என்னென்னவோ கேள்விகள் கேட்டான். அவனது வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சாதுரியமாய் உத்தர முரைத்ததுமன்றித் தான் சாவித்திரியின் வீட்டுக்குச்செல்ல அவனது உத்தரவையும் பெற்றனள் ரமணி. ஆனால் அவள் தன் தோழியைப் பார்க்க விரும்பியதற்கு மெய்க்காரணம் என்னவென ஜனார்த்தனன் அறிந்துகொள்ளவில்லை.

மணி எழரையாயிற்று. பங்கஜவல்லியம்மாள் வீட்டுவாசலின்முன்பு அழகிய கோச்வண்டியொன்று நின்றது. ரமணி தன் அத்தானிடம் விடை பெற்றுக்கொள்ளச் சென்றாள். "ரமணி! நீ உண்மையாகவே சாவித்திரியின் நிச்சிதார்த்தத்தைப்பார்ப்பதற்காகவா போகிறாய்?" என்றனன் ஜனார்த்தனன். "ஆமாம் அத்தான்! அதற்குத்தான் போகிறேன். ஆனால் முக்கிய

மாய்ச் சாவித்திரியைப் பார்ப்பதற்கே போகிறேன் " என்றனள் நங்கை. ஜனார்த்தனன் புன்னகையுற்றான். ரமணியும் புன்னகையுடன் " சரி நான் போய்வருகிறேன் அத்தான்! " எனச் சொல்லி அவனிடம் விடைபெற்று, பின்பு தன் அன்னையிடம் விடைபெற்று ருக்மணியம்மாளோடு வண்டியி லேறினாள்.

சில நிமிஷங்களில் வண்டி சாவித்திரியின் வீட்டுமுன்பு வந்துநின்றது. ருக்மணியம்மாளும் ரமணியும் வண்டியைவிட்டிழிந்து இல்லினுட் புகுந்து உட்கட்டிலுள்ள ஓரறைக்குச் சென்றார்கள். ஆங்கு, ஓர் மங்கைப் பருவத்துச் சுமங்கலி, ஓர் மடந்தைப் பருவத்துச் சுமங்கலி, இரண்டு கிழச் சுமங்கலிகள், ஓர் எட்டுவயது விதவை ஆகிய ஐந்து ஸ்திரீகள் சகிதமாக ஓர் பாயின்மீது வீற்றிருந்த சாவித்திரி ரமணியைக் கண்டவுடன் " வா ரமணி! உட்கார், எப்பொழுது வந்தாய்? " என்றனள். "இப்பொழுதுதான் வந்தேன்." எனச் சொல்லியவாறே பாயின்மீதமர்ந்தனள் ரமணி. " நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் புருஷர்கள் போஜனத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் " என்று ருக்மணியம்மாள் அகன்று போயினாள். சாவித்திரியும் ரமணியும் இரண்டு சௌந்தரியப் பதுமைகள்போன்று ஒருவரையொருவர் உற்று நோக்கிக்கொண்டிருந்தார்கள். " எப்பொழுது வந்தாய்? இப்பொழுதுதான் வந்தேன் " என்ற அனுவசிகமான மொழிகளையன்றி இவ்விரு சகோதரிகளும் சம்பாஷிக்க விஷயமொன்றுமறிந்திலர்போலும். நிறையன்புடைய நேயர்கள் நெடுநாட்பிரிந்து கூடியவுடனே வார்த்தையாடுதற்கு விஷயமொன்றுமறியாது ஒருவரையொருவர் உற்று நோக்கிக்கொண்டிருப்பது உலகவியல்பே. அருகேயிருந்த சுமங்கலிகள் நால்வரும், நமதிரு சகோதரிகளைப்பற்றியும் அவர்களது அன்பைப்பற்றியும், தங்களது அதி தீக்ஷண்ய வாக்கு சாதுரியத்தினால் வர்ணித்துப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்.

மணி பத்தாவதற்குமுன் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் தங்கள் தங்கள் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். சாவித்திரியின் தந்தை தன் எதிர்கால மருகரது பந்து மித்திரர்களோடு மாடியிற் படுத்துக்கொண்டாராகையால், முற்கட்டிலுள்ள அவரது அறையில் ருக்மணியம்மாள் சாவித்திரி ரமணி ஆகியமூவர் சயனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவ்வறையில் ஓர் பெத்ரோல் எண்ணெ விளக்கெரிந்துகொண்டிருந்தது. ருக்மணியம்மாள் தன் பாயிற் படுத்துத் தன் விழிகளை மூடிக்கொண்டிருந்தாள். நமது சகோதரிகளோ தீபத்தினருகே வீற்றிருந்தனர். சாவித்திரி ஓர் மாதாந்த சஞ்சிகையைத் தன் தோழி கையிற் கொடுத்து, "எனக்குத் தூக்கம் வரவில்லை ரமணி! இதில் ஏதேனும் ஓர் பாகத்தை வாசி, நான் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன்" என்னவே, "ஆமாம் நீதான் கலியாணப் பெண்ணாயிற்றே,

உனக்கெப்படித் தூக்கம் வரும்!" எனக் கூறிவிட்டுச் சஞ்சிகையில் ஓர் பாகத்தை வாசிக்கலாயினள் ரமணி.

சுமார் நாற்பது நிமிஷங்களாக ரமணி வாசித்துக்கொண்டேயிருந்தாளாம். சாவித்திரியும் கேட்டுக்கொண்டேயிருந்தாளாம். ஆனால், வாசிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி அஃறிணைப்பொருள்களாகிய சயனப்பாய்கள் எவ்வளவு அறிந்துகொண்டனவோ, அவ்வளவுதான் வாசித்தவளும் கேட்டவளும் அறிந்துகொண்டார்கள். இவ்வளவு கவனத்தோடு இருவரும் நாற்பது நிமிஷங்களாக வாசித்துக்கொண்டுங் கேட்டுக்கொண்டுமிருந்தபின்பு, சாவித்திரி, "போதும் ரமணீ! நிறுத்து, அம்மாள் தூங்கிவிட்டாளா பார்" என்றாள். சஞ்சிகையைமூடிவிட்டு ரமணிஎழுந்து ருக்மணியம்மாள் அருகே சென்று அவள்முகத்தை அரை நிமிஷநேரம் உற்று நோக்கிவிட்டு, "சாவித்திரீ! ருக்மணியம்மாள் உன்னுடைய நிச்சிதார்த்தத்துக்காக இன்று முழுதும்உழைத்த களைப்பினால் இப்பொழுது அயர்ந்து தூங்குகிறார்கள், நீயோ உன் நிச்சிதார்த்தத்தைப்பற்றி நினைந்து நினைத்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறாய், உனக்கெப்படித் தூக்கம்வரும்? " என நகைத்துக் கொண்டே நவின்று தான் முன்பிருந்த விடத்தில் வந்துட்கார்ந்தனள்.

"நானிருக்கும் பரிதாப ஸ்திதியில் என்னைப் பரிகஸிக்கவும் உனக்கு மனம் வருகிறதா? இதற்குத்தானா உன்னை அழைத்து வரும்படி அம்மாளை அனுப்பினேன் " என ஒவ்வொரு மொழியையும் கேட்பார் நெஞ்சம் நெகிழச் சோகத்திற் சுழன்றெழுந்த குரலிற் கூறினள் சாவித்திரி.

( தொடரும். )

சு - அ - சுப்பராயப்பிள்ளை.

---

திராவிட வித்தியா விநோத

## விடுகதை வினாவிடை.

புதுவைக் கலைமகள் பத்திராபர்

நீடும் வாழ்க என்ற

நடுவெழுத்தலங்கார விடுகதை வினா.

## சிந்து.

தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத் தான.

## கண்ணிகள்.

தாமரையின் பெயரொன்று தான்றியின்பேர் தனிலொன்று
தலமொன்று வூரதனி லொன்று
மாமறைசொல் திருமால்பே ரொன்றுசிவன் பெயரொன்று
மதுவுண்ணும் வண்டுவின்பே ரொன்று
நேமவீர சைவர்பெய ரொன்றுபானுப் பெயரொன்று
நீணிலத்தி லட்டகர்ம மொன்று
சேமவயன் மனையொன்று பூர்வீகவாகம மொன்று
தேசளபாக் கியவான்பே ரொன்று (தான)

சிற்பநூலொன் றகத்தியன் பெயரொன்று திதியொன்று
சீர்த்திபெற்ற மன்னவனி லொன்று
பொற்பணிபூ டொன்றுகுக நாயகன்பேர் தனிலொன்று
பூவையர்வி ரதமதி லொன்று
விற்பனர்சொல் துதிப்பெய ரொன்றுசப்தத்வீபமொன்று
விள்ளுதற்கைங் கெழுத்துப்பே ராகும்
கற்பனைப்பொ ருடெரிந்த தினடுவி லிலகிய
கமழகூ ரங்களைெய டுத்து. (தான)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சந்ததமும் வரிசைமுறை யாக விந்தத்
தாரணியிற் றனெழுதிப் பார்க்கும் போது
சுந்தரஞ்சேர் [புதுவைக் கலைமகள்]என் றேதாங்
துய்ய[பத்தி ராதிபர்]தான்[நீடும் வாழ்க]
சிந்தைமகிழ் கூர்ந்துசொலும் பொருளை யோர்ந்து
செந்தமிழ்வல் லோர்கள்விடை பகரமிக்க
பைந்தமிழால் மௌனகுரு ருத்ரமூர்த்தி
பாரின்மிசை யனுதினமும் வேண்டி னேனே.

## இதற்கு விடைப்பொருள்.

---

| | |
|---|---|
| 1 - தாமரையின் பெயர் ஒன்று | அம்—பு—ஜம் |
| 2 - தான்றியின் பெயர் ஒன்று | கந் — து—கன் |
| 3 - தலமொன்று | திரு—வை—யாறு |
| 4 - ஊர் ஒன்று | பால—க்—காடு |
| 5 - விஷ்ணு பெயர் ஒன்று | சங் — க—பாணி |
| 6 - சிவன் பெயர் ஒன்று | சட —லை—யாடி |

| | |
|---|---|
| 7 - வண்டுப் பெயர் ஒன்று | பிர —ம —சம் |
| 8 - விரசைவர் பெயர் ஒன்று | சங் —க —மர் |
| 9 - சூரியன் பெயர் ஒன்று | இரு —ள் —வலி. |
| 10 - அட்ட கர்மம் ஒன்று | தம் —ப —னம் |
| 11 - அயன் மனைவியர் ஒன்று | சாவி —த் —திரி |
| 12 - ஆகமம் ஒன்று | சிந் —தி —யம் |
| 13 - பாக்கியவான் பெயர் ஒன்று | மக —ரா —ஜன் |
| 14 - சிற்பநூல் ஒன்று | சித் —தி —ரம் |
| 15 - அகத்தியன் பெயர் ஒன்று | கும் —ப —சன் |
| 16 - திதி ஒன்று | சது —ர் —த்தி |
| 17 - அரசன் ஒன்று | சதா —சி —கன் |
| 18 - பூடு ஒன்று | காட் —டு —மரி |
| 19 - முருகன் பெயர் ஒன்று | கட —ம் —பன் |
| 20 - பெண்கள் விரதநாள் ஒன்று | திரு —வா —திரை |
| 21 - துதிப் பெயர் ஒன்று | புக —ழ் —ச்சி |
| 22 - சப்தத்வீபம் ஒன்று | புட் —க —ரம். |

மேற்கண்ட பெயர்களின் நடுவெக்ஷரங்களையெடுத்து வரிசைக் கிரமமாகவெழுதி வாசித்துப் பார்க்க [ புதுவைக் கலைமகள் பத்திராதிபர் நீடு வாழ்க ] என்றாகும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.

திருச்சி விஸ்வப்ரம்ஹ மஹாஜன சென்ட்ரல் சபை
வைஸ்பிரஸிடெண்ட் அண்ட்
**EX** - முனிசிபல் கௌன்சிலர்
பழநிஸ்தலம்.

---

# இலக்கியப் பகுதி.

## மணிமேகலை.

### உலகவறவி புக்க காதை.

[ பதினேழாவது மணிமேகலை காயசண்டிகையென்னும் விச்சாதரிவயிற்று யானைத்தீயவித்து அம்பலம்புக்கபாட்டு. ]

---

க - உ0. பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
யறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
றிறத்து வழிப்படூஉஞ் செய்கை போல
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்றொலை வில்லாத் தகைமை நோக்கி
யானைத் தீநோ யகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
யடலரு முன்னீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லா
மணங்குடை யளக்கர் வயிறு புக்காங்
கிட்ட தாற்றாக் கட்டழற் கடும்பசிப்
பட்டே னென்றன் பழவினைப் பயத்தா
லன்னை கேணீ யாருயிர் மருத்துவி
துன்னிய வென்னோய் துடைப்பா யென்றலு
மெடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவ
டுயர நீங்கித் தொழுதன ளுரைக்கும்

இ - ள். ஆதிரை இட்ட வுணவையேற்ற அமுதசுரபியென்னும் பிக்ஷா பாத்திரத்திலுள்ள பெரிய சோற்றுத்திரளையானது, நல்வழியே சம்பாதித்த பொருள் அறவோனிடத்துப் பெருகுதலுறுஞ் செய்கையைப் போல, வாங்குகின்ற கைகள் வருந்துமாறு, நிலைபெற்ற உயிர்களுக்குக் கொடுத்துத் தான் தொலைவில்லாத தகைமையை நோக்கி, யானைத்தீ நோயென்னும் 'பஸ்மக வியாதியை வயிற்றிற்கொண்டுள்ள காயசண்டிகையெனும் பெண்ணுனவள் மணிமேகலையை வணங்கி, " திருமால் உலகின்கண் இராமனாக அவதரித்து மயங்கி, வலிமையும் அருமையுமுடைய கடலை இலங்கா நகரம் செல்ல அடைத்த நாளில், குரங்குகள் கொணர்ந்து எறிந்த நெடியமலைகளெல்லாம் வருத்தமுடையகடலின்வயிற்றிற்புகுந்தாற்போல, இட்ட பொருளால் தணியாத நெருப்புப்போலும் கடும்பசியடைந்தேன், எனது வினைப்பயனால்; தாயே, அரிய உயிரைப் பாதுகாக்கும் மருந்தையுடையாய், நீ கேட்பாயாக, நெருங்கியஎனது பஸ்மக வியாதியைப் போக்குவாயாக " என்றுசொல்லினள். சொல்லுதலும், மணிமேகலைதான் கையிலெடுத்த பாத்திரத்திலுள்ள அன்னத்தைப்பிடித்துக் காயசண்டிகைகையில் விரும்பி இடுதலும், காயசண்டிகையானவள் உண்டு வயிற்றைச் சுடுகின்ற பெரும்பசி நீங்கித்தன்பழும் நீங்கித் தொழுது சொல்லுவாளாயினள்.

பத்தினிப் பெண்டிர் - ஆதிரை. பாத்தூண்-( இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும்தென்புலத்தார்முதலியநால்வர்க்கும்)பகுத்துக்கொடுத்து உண்ணப்படும் உணவு; பாத்தல் - பகுத்தல். அறவோன் - சற்பாத்திரம். தானப்பொருள் பாத்திரத்தின் பெருமைக்குத் தக்கபடி பெருகுதலுறும் என்பதை “ அறப்பயனும், தான்சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால், வான்சிறிதாப்போர்த்துவிடும் ” என்ற நாலடியாரால் உணர்க. நெடியோன்- திருமால். மயங்கி - பருவதமுனிவரும் நாரதமுனிவரும் அம்பரீடனுக்கிட்ட சாபமாகிய அந்தகாரத்தைத் தான் ஏற்றுக்கொண்டமையால் மயக்கமுற்று. திருமால் இராமனாக அவதரித்தபோது முற்கூறிய சாபாந்தகாரத்தால்மயக்கமுற்றிருந்தாரென்பது பின்வரும் செய்யுளாலுணரப்படும். “கன்னியந்தூாய்க் கமலலோசனன் றயாதற்கு, மன்னுநன்மகனாகியே வந்தனனுதித்து, முன்னையந்தகாரத்தினுன் மூடிடப்பட்டுத், தன்னைமாயனென்றறிந்திடாதுறைந்தனன்சார்ந்தே.” இஃது இலிங்கபுராணம், உத்தரகாண்டம், அம்பரீடனை ஆழிகாத்தவத்தியாயம் ௮௫. முந்நீர் - கடல் அணங்கு - தெய்வத்தன்மையுமாம். அளக்கர் - கடல். ஆருயிர் மருந்து - அன்னம்.

௨௧ - ௫௨ மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநக ருள்ளேன்
விஞ்சையன் றன்னொடென் வெவ்வினை யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன்
கடுவர லருவிக் கடும்புனல் கொழித்த
விடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தேன்
புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மாவுரி யுடையன் விருச்சிக னென்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோ
ரிருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணுறு பாப்பிற்
பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்

இ - ள். மாசற்ற வெள்ளிய ஒளியையுடைய வடதிசையில் வித்தியாதருலகிலுள்ள குற்றமில்லாத காவலையுடைய காஞ்சனபுரமென்னும் நகரிலுள்ளவளாகிய யான், தீவினை பயன்கொடுப்பத்தோற்ற, என்கணவனாகிய வித்தியாதரனொடு தெற்கின்கண்ணதாகிய பொதியின்மலைவளங்களைக் காணும்பொருட்டு வந்தேன். இடையே விரைந்து வருதலையுடைய அருவி நீரானது தெள்ளிய மணலையுடைய காட்டாற்றின்கரையில் சேர்ந்து கணவனுடனிருந்தேன். இருக்கையில், முறுக்கிய பூணு நூலையுடைய மார்பையும், திரித்து முறுக்கிய நீண்ட சடையையும், மாவுரியையும் உடையவனாகிய விருச்சிகன் என்போன், பெரிய குலைகளையுடைய பனையினது கரிய கனியையொத்ததோர் பெருங்கனியாகிய நாவற்பழமொன்றையெடுத்துத்

தேக்கிலேயில் வைத்துவிட்டு, நெடுந்தூரம் மணங்கமழ்கின்ற பூக்களின் பரப்பினையுடைய பொய்கையில் நீராடச்சென்றேனாக.

வாலொளி-வெள்ளிய ஒளி. சேடி-வித்தியாதரருலகு. சேடிவெள்ளிமலைக்கண் உள்ளதாதலின் அதற்கு வாலொளி கூறப்பட்டது. உருப்ப - தோற்ற; அழலவென்றுமாம்.

௩௩ - ௪௮. தீவினை யுருத்தலிற் செருக்கொடு சென்றேன்
காலா லந்தக் கருங்கனி சிதைத்தே
னுண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டன னென்னைக் கருங்கனிச் சிதைவுடன்
சீர்திகழ் நாவலிற் றிப்பிய மான
தீரா றாண்டி லொருகனி தருவ
தக்கனி யுண்டோ ராறீ ராண்டு
மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டி லொருநா ளல்ல
துண்ணா நோன்பினே னுண்கனி சிதைத்தா
யந்தரஞ் செல்லு மந்திர மிழந்து
தந்தித் தீயாற் றனித்துய ருழந்து
முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்
குண்ணு நாளுன் னுறுபசி களைகென
வந்நா ளாங்கவ னிட்ட சாப
மிந்நாள் போலு மிளங்கொடி கெடுத்தனை

இ - ள். தீவினை பயன்கொடுப்பத் தோற்றுதலினால் களிப்போடு சென்றவளாகிய யான், காலினால் அக்கரிய நாவற்பழத்தைச் சிதைத்துக் கெடுத்தேன்; அப்போது அதை உண்ணும் விருப்பத்தினால் வருகின்ற விருச்சிகன் அக்கருங்கனியழிதலோடு என்னைக் கண்டனன்; கண்டதும் கோபித்து, “ தெய்வத்தன்மையுள்ளதும் பன்னிரண்டு வருடத்துக்கொருமுறை ஒருகனியைத் தருவதுமாகிய சிறப்புப் பொருந்திய நாவன்மரத்திலுண்டானது இது; இக்கனியையுண்டவர்கள் பன்னிரண்டு வருடம் மக்களுடம்பினால்வரும்பசியொழிந்திருப்பார்கள்; நானோ பன்னிரண்டு வருடத்தில்ஒருநாளல்லது உண்ணாதவிரதத்தையுடையேன்; இன்றுநான்உண்ணும் கனியையழித்தனையாதலின், நீ அந்தரத்திற் செல்லுகின்ற மந்திரத்தை மறந்து யானைத்தீயென்னும் பஸ்மக வியாதியினால் பன்னிரண்டு வருடம் தீராப்பசிகொண்டு வருந்தி, பிறகு ஈங்கு முதிர்ந்த அந்நாவற்கனியை நான் உண்ணுகின்ற நாளில் உனது மிக்க பசியை நீக்குக ” என்று அந்நாளில் அவ்விருச்சிகன் இட்ட சாபத்தை, இளங்கொடிபோலும் மணிமேகலை! இந்நாள் நீ கெடுத்தனைபோலும்.

(வரும்.)

பத்திராதிபர்.

## மயிலச் சிலேடை வெண்பா.

கோளராம் போரிலுங்கான் கூர்சந்தின் வேரினிலும்
வாளரா மேவு மயிலமே - கேளராய்
வள்ளிக்கு வந்தார் வணங்கடியா ரைப்புரக்க
வள்ளிக்கு வந்தார் வரை.

இ - ள். கோளர்-கொல்லுந்தொழிலையுடையவர்கள்,ஆம்-உண்டாகிய, போரிலும்-சண்டையிலும், வாளர் ஆ-வாளாயுதத்தையுடையவர்களாக, மேவும்-பொருந்துஞ் சிறப்பினையும், கான்-பரிமளம், கூர்-மிகுந்த, சந்தின்-சந்தனமரத்தின், வேரினிலும்-வேர்களிலும்,வாள்-மாணிக்கங்களையுடைய, அரா-பாம்புகள், மேவும்-விரும்பியிருக்குஞ் சிறப்பினையுமுடைய,மயிலமே-மயிலமலையே, கேளராய்-நாயகராகி, வள்ளிக்கு-வள்ளிநாயகியாரிடத்தில், உவந்தார்-மகிழ்ந்திருந்தவரும், வணங்கு-வணங்குகின்ற, அடியாரை-அடியவர்களை, புரக்க-இரக்ஷிக்க, வள்-வளப்பம்பொருந்திய, இ-இந்த, கு-பூமியில், வந்தார்-எழுந்தருளினவருமாகிய முருகக்கடவுளுக்கு, வரை-மலையாகும்.

'வாள்போழ்விசும்பு' என்றதுபோல, ஒளியெனப் பொருள்படும் வாள் என்பது அதனையுடைய மணிக்கு ஆயினமையால், ஆகுபெயர். வள்ளிக்கு என்றது வள்ளிநாயகியாரிடத்து என நான்கனுருபை யேழனுருபாகத் திரித்துப்பொருளுரைக்கப்பட்டது.

வேட்டு வரைப்பெண்கள் வீயா மரைமலர்கள்
வாட்டடங்கண் மன்னு மயிலமே - யோட்டியே
ஆட்டுப் பரியா ரமரர்தவ ரைப்பனித்த
ஆட்டுப் பரியா ரகம்.

இ - ள். வேட்டுவர்-வேடர்களுடைய, ஐ-அழகிய, பெண்கள்-மகளிர்கள், வாள்-வாள்போலும், தடம்-விசாலமாகிய, கண்-விழிகளை, மன்னும்-சேர்ந்திருக்குஞ் சிறப்பினையும், வீ-அன்னப்பக்ஷிகள், ஆம்-இருக்கும், மரைமலர்கள்-தாமரைமலர்கள், வாள்-பிரகாசிக்கும், தடங்கள்-குளங்கள், மன்னும்-நிலைபெற்றிருக்குஞ்சிறப்பினையுமுடைய,மயிலமே-மயிலமலையே ஓட்டியே-செலுத்தியே, ஆள்-ஆளும், துப்பு-சாமர்த்தியம், அரியார்-அருமையானவர்களாகிய, அமரர் - தேவர்களையும், தவரை - முனிவர்களையும், பனித்த-வருத்திய, ஆடு-ஆட்டை, பரியார்-வாகனமாகவுடையவராகிய முருகக்கடவுளுக்கு, அகம்-இடமாகும். எ - று.

'ஒருமொழிமூவழிக்குறைதலுமனைத்தே.' என்னும் நன்-உயிரீற்-சூ - ம். சூ. விதிப்படி, தாமரைமலர்கள் எனற்பாலது, மரைமலர்கள் என முதற்குறைந்து நின்றது. 'அல்வழி யெல்லா முறழெனமொழிப' என்னுந்தொல்காப்பியம் புள்ளிமயங்கியல் ளு-ம் சூத்திர விதிப்படி, ஆள் துப்பு, ஆட்டுப்பு என்றாயது. ஸ்ரீ முருகக்கடவுள் தகரேறியது, நாரதமுனி

வர் சிவபெருமானுக்குப் பிரியமுண்டாக ஒரு வேள்வியைச்செய்தார். அந்த வேள்வியில் ஒரு ஆடுதோன்றி யாவரையும் வருத்த அதைக்கண்ட தேவர்களு முனிவர்களும் பயந்து கயிலைக்கட்சென்று, ஆண்டுத் திருவிளையாடல்கள் செய்துகொண்டிருந்த ஸ்ரீ முருகக்கடவுளைக்கண்டுபணிந்து தங்கள் குறையை விண்ணப்பஞ்செய்ய, அதைக்கேட்ட ஸ்ரீ முருகக்கடவுள் இரக்கமோடு அந்தத்தேவர்களை நோக்கி நீங்கள் அஞ்சுதல் விடுமினென்று திருக்கரமமைத்துப்பின் வீரவாகுதேவரை யேவி அத்தகரைப் பிடித்துக்கொண்டுவரச்செய்து தாம் அதை வாகனமாக ஏறி நடாத்தினர். இச்சரித்திரம் கந்தபுராணம் உற்பத்திகாண்டம் தகரேறு படலத்தில் பரக்கக்காணலாம்.

“ஒருமையுளொருங்கி, யிருகைசெய்வார்த்து, நாரதனோம்பிய, செந்தீக்கொடுத்த, திருகுபொறிகோட்டுத், தகர்வருமதியோய்.” என்று கல்லாடத்திற் கூறியிருப்பதாலும் உணர்க. (௯)

பு - அ - பெரியசாமிப்பிள்ளை.

---

## சாத்திரப் பகுதி.

### மங்கலம்.

( தொடர்ச்சி. )

இந்திரவிற்போற் சற்றுப் போது பற்பலவித அவாக்களாம் நிறங்களாற் கவினாயும், மின்போற் சஞ்சலமாயும், உதித்தபோதேயழிவெய்துபவளாயுமிருப்பள். மூர்க்கரிடத்தேயிருப்பவளாயும், வஞ்சனை செய்வதிற்காணலைச் சயங்கொண்டவளாயும், நதிப்பெருக்கேப்பக்கணகாலமும் ஒருவகையிருப்பையுறாதவளாயும், கொடிய மனத்தரிடத்தே குடிகொண்டவளாயுமிருப்பள்.

பிறர்பொருளையபகரித்தலாலாம்பொருட்பேறடையளும், நமனுற்கவர்ந்தபொருளையும் கவர அவாவுமியற்கையளும், துட்ட மனோ வியாதிகள் ஒளித்தற்கிடமுடையளாயும், மங்களமற்றவளாயும் இராநின்ற இவ்விலக்குமியால் துன்பமேயன்றிச்சிறிதேனுமின்பத்தையாவரேகண்டுளார்.

காண்பான் மனதிற்கினிமையளாயும், சாகசத்தாலடையத்தக்கவளாயும், கணத்திலழிவுறுபவளாயும், பகைவராற்சூழப்பெறுபவளாயும் இராநின்ற பொன்மங்கையானவள், விடதரவீட்டங்களாற்சுற்றப்பெற்றபாழுங்கிணற்றுதித்த கொடியின் பூப்போலச் சித்த விருத்தியை வருத்துவள்.

தனமங்கையொப்ப ஆயுளும் சுகவேதுவன்றென்றுணரவேண்டும். இலையினுனியிற்பொருந்தும் நீர்த்துளிபோன்றாயுளானது நிலையற்றதாதலின் பித்தப்பிடித்ததை நிகர்ப்ப அகாலத்தின்கண்ணே நீசமான ஆகத்தை

விட்டுப்போம்.விடய விடதாம்தீண்டினதானே மெலிவுற்றமனமுடையரா யும்,ஆன்மஞானமற்றவராயுமிருப்பார்க்காயுளானது அன்பகாரணமேயாம்.

அற்றேற் பிரமஞானிகட்கு மங்ஙனந்தாஞுமாலோவெனின்? அற் றன்ரும், மற்றேரு, உணரத்தக்கனவெவையுமுணர்ந்து, பரிபூரண சிவத் திடத்தேவிசிராந்தியடைந்து, இலாபாலாபங்களிற்சமமனமுடையவராயவர் தம்மாயுளானது இன்மையேயீயும்.இவ்வளவிற்றெனவரையுறுத்தப்பெற்ற ஆகமே ஆன்ம வடிவமென நிச்சயமுற்ற நம்போலியர் குடும்பக்கொண் மூவின்மின்னற்போன் றிலங்கு மாயுளால் இன்பமெங்ஙனியையப் பெறு வோம். ஆகமே ஆன்மாவென்னுங் கருத்திருக்கின்றமையின் ஆயுணீங்கி ஞ லாகம் நீங்குமென அறியத்தக்கதாம்.

(இன்னும் வரும்)

வீர - சு.

---

## நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

21 - நாரிகேளபலாம்புநியாயம்:— நாரிகேளபலம் - தேங்காய், (இளநீர்க்காய்) அம்பு - ஜலம், நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒருவ னுக்கு வரும் பொருட்செல்வமானது கொஞ்சங்கொஞ்சமாக வருதலிது போலவென்கின்றது. அதாவது: இளநீர்க்காயில் கொஞ்சங்கொஞ்சமாக ஜலம்வந்து சேர்தல்போலவென்பதாம்.

22 - இராஜ்ஜு சர்ப்ப நியாயம்:— இரஜ்ஜு - கயிறு, சர்ப்பம் - பாம்பு, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒரு வஸ்துவில் மற்றொருவஸ்து காணப்படலிதுபோலவென்கின்றது. அதாவது: கயிற்றினிடத்தில் பாம்பு காணப்படுதல்போலவென்பதாம். இங்ஙனங்கூறுபவர் அநிர்வசனீயக்கியாதி வாதிகளாகிய வேதாந்திகள். இதனையே ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவாகக் காணப்படலிதுபோலவென்று கூறுவர் அந்நியதாக்கியாதி வாதிகளாகிய நையாயிகர். அதாவது: கயிறே பாம்பாகக் காணப்படுதல்போல வென்பர். இன்னும் இதில்பல மதங்களுள.அவையாவும் விருத்திப்பிரபாகரமென்னும் நூலில் காணப்படும். சுக்தி ரஜத நியாயம், ஸ்தாணு புருஷநியாயம் முதலி யனவும் இதுபோன்றனவேயாம்.

23 - தேஹளீ தீப நியாயம்:— தேஹளீ-வாசற்படி,தீபம்-விளக்கு, நியாயம் - திருஷ்டாந்தம் இது ஒரு வஸ்து இடையேயிருந்து இருபுறனும் பயன்படலிதுபோலவென்கின்றது.அதாவது: வாசற்படியின்மீது வைக்கப் பட்ட விளக்கானது உள்ளிடத்தையும் புறவிடத்தையும் விளக்குதல்போல வென்பதாம்.

இதனை நடுநிலைத் தீவகம் என்றுங் கூறுப.

175 165



24 - ஆம்ரவன நியாயம்:— ஆம்ரவனம் - மாந்தோப்பு, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒரு கூட்டத்தில் எது அதிகமாயிருக்கின்றதோ அதன்பேரால் அக்கூட்டம் வழங்கப்படவிதுபோலவென்கின்றது. அதாவது: ஒரு தோப்பில் பலவித மரங்களுள்ளவாயினும் மாமரமதிகமாயிருப்பின் அது மாந்தோப்பென்றே வழங்கப்படுமாறுபோலவென்பதாம்.

25 - கஜ சூகர நியாயம்:— கஜம் - யானை, சூகரம் - பன்றி, நியாயம் - திருஷ்டாந்தம். இது பெரியார் சிறியாரைக் காணின் ஒதுங்கிப்போதலிதுபோல வென்கின்றது. அதாவது: யானையானது பன்றியைக்கண்டு வழிவிலகிச்செல்வதற்குக் காரணம் பன்றி தன்னினும் வலியுடையதென்னும் கருத்தினாலன்று. ஆனால் பன்றியினிடத்துள்ள அசுத்தம் காரணமாம்; அதுபோலவென்பதாம்.

26 - கூபாகாச நியாயம்:— கூபம் - கிணறு, ஆகாசம் - வெளி, நியாயம் - திருஷ்டாந்தம். இது முன் உள்ளதே முயற்சியால் வெளிப்படலிதுபோலவென்கின்றது. அதாவது: கிணறு தோண்டியவிடத்துக்காணப்படும் வெளியானது வேறெங்கிருந்தாவது கொண்டுவரப்படாமல் அங்கு முன் மண்ணால் மூடப்பட்டிருந்த வெளியே மண்ணையெடுத்துவிட்டமையால் காணப்பட்டவாறுபோலவென்பதாம்.

(இன்னும் வரும்.)

அநந்தபத்மநாப ஸ்வாமி
காஞ்சீபுரம்.

---

## சுஜன சம்வாதம்.

### ஒரு நல்ல கப்பல்

(முன் தொடர்ச்சி)

**சாத்தன்.** ஐயனே, தங்களுடைய இனிய பிரசங்கத்தால் துஷ்ட லக்ஷணம் இவ்வகையினதென்றும், சத்லக்ஷணம் இப்படிப்பட்டதென்றும் அறிந்துகொண்டேன்.

இனிச் சிஷ்ட லக்ஷணமாக முன் தாங்கள் கூறிய வாக்கியத்தைச் சுருக்கி 'வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளுந்தன்மை யாதோ அதனையுடையார் சிஷ்டர்' என்று கூறுவதால் வருந் தோஷம் யாது?

**கொற்றன்.** அங்ஙனம்கூறுவதால் அதிவியாப்தி தோஷம் பிராப்தமாம்.

**சாத்தன்.** எங்ஙனம் பிராப்தமாம்?

**கொற்றன்.** வேதத்தில்சிலபாகத்தைமாத்திரம்அங்கீகரித்துச்சிலபாகத்தை

அங்கீகரியாதாரும் உளராதலின் அவரும் சிஷ்டரெனப் படுவரன்றோ!

**சாத்தன்.** அத்தன்மையர் யாவர்?

**கொற்றன்.** ஸ்நானம், சந்தியோபாசனே முதலியவைகளையங்கீகரித்து, யாகாதிகளை அங்கீகரியாதிருப்பவர்களே.

**சாத்தன்.** இங்ஙனம் அவர்கள்யாகாதிகளையங்கீகரியாமைக்குக் காரணம் யாது?

**கொற்றன்.** வேத தாற்பரியத்தைத் தக்காரையடுத்து விசாரியாமையும் பௌத்தாதி பரமத வசன சிரவணமும், அவரது சேர்க்கையும் காரணமாம்.

**சாத்தன்.** ஐயனே இனியிடையேயேற்பட்ட பிரசங்கங்கள் நிற்க, சீவன் இத்தேகத்தினும் வேறு, நித்தியன் என்பதில் சுருதிப் பிரமாணம் கூறியருளல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

ஆ - செங்கல்வராயமுதலியார்
காஞ்சீபுரம்.

---

## சுவிவேக தர்ப்பணம்.

(ஸ்ரீசாந்தாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்
ஆந்திர பாஷையில் அருளியது.)

(தொடர்ச்சி.)

மேலும், பக்திமார்க்கம் பாலியமென்றும், கர்மயோகம் அல்லது யோகத்திற்குப் பூர்வார்த்தாநுசந்தானம் யௌவனமென்றும், ஞானம் தற் சம்பந்த ஞானயோகம் அதாவது யோகத்துக்கு உத்தரார்த்தாநுசந்தானம் அல்லது மௌன நிஷ்டையவலம்பித்து நீ நான் என்னும் துவிதபாவத்தை விட்டுத் துரியதிருஷ்டியுண்டாகி நிர்மலத்தையடைந்திருக்கும் ஆநந்தத்தை யநுபவித்தல் வார்த்திகமென்றும் சொல்லப்படும்.

பாலியாவஸ்தையிலும் வார்த்திகாவஸ்தையிலும் அகங்கார மமகாரங்கள் அடங்கியிருந்தாற்போல, பக்தி ஞானங்களை அவலம்பித்த அவசரத்தில் அகங்கார மமகாரமுதலிய விகாரங்கள் முழுதும் அடங்கியிருக்கும். யௌவனத்தில் அகங்காரம் தலைகாட்டுதல் சகசமானாற்போல, யோகத்தின் பூர்வார்த்தாநுசந்தானத்தை உபக்கிரமித்தவர்களுக்கு, 'சாபாநுக்கிரக சக்தியுடையோம்' என்றும், 'அணிமாதி சித்திகள் அடைந்துள்ளோம்' என்றும் மனதினிடத்து அகங்காரம் தலைகாட்டிக்கொண்டிருக்கும் அவர்களுக்கு நித்தியாநந்தாநுபவம் தூரமாகவேயிருக்கும்.

எவர்களுக்கு ஞானசம்பத்தை யடையவேண்டு மென்னும் இச்சை யுண்டாயிற்றோ அப்படிப்பட்ட முமுக்ஷுக்கள் சுபஸ்யசீக்ரம்’ என்றபடி விரைவில் ஆன்ம தத்துவத்தை விசாரித்தல் வேண்டும். ஆன்ம தத்துவமப்பியாசமானபக்ஷத்தில் அத்துவிதீய பாவம் சித்திப்பதற்கு ஐயமில்லை. ஆன்மதத்துவத்தையறிவதற்குத் தத்தவ ஞானம் ஆவசிகம் வேண்டற்பாலது. கடமானது அதன்காரணமாகிய மண்ணுக்கு வேறுபட்டதல்லவென்று அதன் எதார்த்த சொரூபத்தை அறிவதுபோல, பிரபஞ்சமானது நானாவிகாரங்களாகத் தோற்றிக்கொண்டிருப்பினும், அதைப் பார்க்கும் பிரத்தியகான்மாவே அதுவல்லது வேறல்லவென்று ஷட்வித லிங்கங்களினாலே பிரபல சுருதிகளின் தாற்பரியத்தைக் கிரகித்து நிதித்தியாசத்திற்கு வருவித்துக் கொண்டு ஆநந்தித்தலே தத்துவ ஞானமாம்.

அவ்விதமாக அறியாமற் போவதுங்கூட வுண்டோ எனின், பித்த விகார தோஷத்தினால் கண்களுக்கு வெள்ளைவஸ்திரம் மஞ்சளாகத்தோற்றுவதுபோலவும், பிரகிருதி தோஷத்தினால் ஒட்டகத்திற்குவேப்பிலை இனிப்பாயிருப்பதுபோலவும், அவஸ்தாந்தரதோஷத்தினாலே தூங்குகின்றவன் சொப்பனத்தில் பசுபக்ஷியாதிகள் சம்பாஷிக்கக் காண்பதுபோலவும், அநுபவ தோஷத்தினாலே கள்ளிப்பாலைப் பசுவின் பாலாக நினைத்தாற்போலவும், அபரிசயதோஷத்தினாலே புதிதாகச் சிநேகம் செய்த துன்மார்க்கனைச் சன்மார்க்கனாக எண்ணினாற்போலவும், அந்தகார தோஷத்தினாலே கட்டையைப் பார்த்துக் கள்வனென்று பிராந்தியுற்றதுபோலவும், அநப்பியாச தோஷத்தினாலே மூடனுக்கு அக்ஷரங்கள் சித்திரரேகைகளாகத்தோற்றினாற்போலவும் அஞ்ஞான விபரீத சந்தேகாதி தோஷங்களினால் தூஷிதமான மனதையுடைய புருஷனுக்கு, எதார்த்த சொரூபம் இப்படிப்பட்டதென்று கண்டுபிடித்தற்கு முடியாமல், அயதார்த்த பாவப் பிரமை பிறக்கும். இவ்வித பிரமையினாலே அநர்த்தங்கள் அநேகம் சம்பவிக்கும். எதார்த்த ஞானம் கிடைத்தபக்ஷத்தில், காமதேநுவைக் கட்டிக்கொண்டவனுக்குப் பாலுக்குக் குறைவில்லாததுபோலவும், ஆரோக்யஸ்நானம் செய்தவனுக்குப் பத்திய சேவனமில்லாததுபோலவும் துக்க நிவிர்த்திபூர்வகமான சதாநந்தத்தில் ஜலக்கிரீடை செய்வான். சற்சகவாசத்தால் தான் அறியக்கோரின பதார்த்தத்தினுடைய எதார்த்த சொரூபம் திடமாகத் தெரிந்தபிறகு வஸ்து தத்துவத்திற்கு அந்நியதாபாவம் உண்டாகமாட்டாது.

கயிற்றினிடத்துச் சர்ப்ப பிராந்தி யுண்டாவதற்கு மந்தாந்தகாரம், புற்றினணிமை, கயிற்றின் வளைவு இம்மூன்றும் முக்கியகாரணங்கள். இதனால்உண்டான பயகம்பாதி விகாரங்கள்காரியங்கள். இக்காரியகாரணங்களைக்கொண்டு கற்பிதசர்ப்பஸ்திதி தெரிந்துகொள்ளவேண்டுமாயின் காரண பரிஜ்ஞானம் வேண்டியதாயிருக்கும். ஒருவன் கடைக்குச்சென்று காசு கொடுத்துக் கயிறுவாங்கிக்கொண்டுவந்து கன்றின் கழுத்திற் கட்டிப்பிடித்

துக்கொண்டு வயலிலே மேய்த்துக்கொண்டிருந்த விஷயத்தைச் சற்று யோசித்தால் அக்கயிறு என்னவாயிற்றென்று விசாரமுண்டாகும். அவ்விசாரத்தால் கன்றின் கழுத்திலுள்ள கயிற்றையவிழ்த்து அவ்விடத்திற்போட்ட சங்கதி ஞாபகத்துக்கு வரும். அதனால் அவ்விடத்தில் காணப்பட்டுக்கொண்டிருக்கிற சர்ப்பம் கயிறாக இருக்குமோ என்று யூகமுண்டாகும். அந்த யூகத்தினால் சிறிது பயம் அகன்று காற்பங்கு சம்சயம் நீங்கும். ஆயினும் கயிற்றின்கண் சர்ப்பத்தன்மை பூர்ணமாகக் காணப்பட்டுக்கொண்டிருக்கிறபடியினாலே சமீபத்திற் செல்லுதற்குத் தைரியமில்லாமல் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்னும் புத்திபிறந்து கையிலுள்ள தடியினாலே அச்சர்ப்பத்தை மெல்லத்தள்ள, அதனிடத்துக் கமனாகமன பூத்காராதி சர்ப்ப காரியங்கள்எவையும்காணப்படாமற்போகவே,சர்ப்பமல்லவென்று பாதிசம்சயம் நீங்கும். அதற்குமேல் சிறிதுதைரியங்கொண்டு அதைத்தடியினால் அடித்து இங்குமங்குந் தள்ளி நடுவில் தடியைவிட்டு மேலெடுத்துப் பார்க்க, அதனிடத்துச் சலனமெதுவும் இல்லாமற்போதலினாலே முக்காற்பங்கு சம்சயம் தீரும். அதன் பின்னர் தைரியமவலம்பித்துக் கையினால் தொட்டுப் பார்க்ககெட்டியாயிருக்கிறபடியினாலேசர்ப்பமல்லவென்றும்,தான்போட்ட கயிறென்றும் திடமாகத் தெரியவரும். அவ்வளவோடு சம்சயம் பூர்ணமாக நீங்கிவிடும்.

சர்ப்பத்திற்கு ரஜ்ஜு (கயிறு) சுபாவமில்லை. ரஜ்ஜுவினிடத்துச் சர்ப்பத்துவமில்லை. அந்தகார சம்பந்தத்தினாலே இது சர்ப்பமாகக் காணப்படும்போது, பார்ப்பவர்கள் யாவர்க்கும் மனதினிடத்துப் பயத்தை விசேஷமாகக் கற்பித்துக்கொண்டிருந்ததன்றி விஷமெதுவுந் தரித்துக்கொண்டிருந்ததல்ல. பயத்தையுண்டாக்குவது விஷமேயன்றிச் சர்ப்பமல்ல. விஷமில்லாவிடின் சர்ப்யத்தையெவரும் இலட்சியம்பண்ணார். இவ்விடத்து உய்த்துநோக்குங்கள். பிரமம் ரஜ்ஜுபோன்றது; மாயை சர்ப்பம்போன்றது; துக்கம் விஷம்போன்றது; அதில்பயப்பட்டுக்கொண்டிருப்பன் ஜீவன்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

---

## வைத்தியக் குறிப்புகள்.

சீதமண்டலம்:—இதுகடித்தபேர்கள்முதிர்ந்ததேங்காயைஉடைத்து ஒரு மூடி தேங்காயைக் கீறியெடுத்துச் சாப்பிட்ட உடனே அவ்விஷம் தீரும்.

பித்த வேடிப்பு:— இவ்வெடிப்பினால் காலில் இரத்தம் சீழ் முதலானவை வடிந்து நடக்க முடியாமல் அவஸ்தைப்படும் ஒவ்வொருவரும்

தினந்தோறுங் கரிசற்கொட்டைப்பாலைப் பிடித்து அவ் விரணங்களுக்கு அடித்துவரத்தீரும்.

வாந்திபேதி:— கண்டவுடன் மஞ்சள், சுக்கு, வசம்பு, எலுமிச்சம் பழம் இவைகளைத் தனித்தனித் தளுக்கின்றிக் கரியாகச் சுட்டெடுத்துப் பொடித்து ஒவ்வொன்றும் சமனெடையாகக்கலந்து தேன்விட்டு லேகியம் போற்பிசைந்துபாணியில்வைத்துக்கொண்டு சிறு சுண்டைக்காயளவுமுதல் கழற்சிக்காய் பிரமாணம்வரை உருட்டி சிறுவர்முதற் பெரியவர்வரை அவரவர்கள் சரீர நிலைமைதெரிந்து கொடுத்து அப்பால் சமயோசிதமறிந்து சிகிச்சை செய்துவரச் சௌக்கியமாகும். மேற்கண்ட ஔஷதங்களைப்பரீட்சித்துப்பார்த்த ஒவ்வொருவரும் தங்களாற்கண்டறிந்த அனுபவங்களை இப் பத்திரிகையின் வாயிலாக வெளியிட வேண்டுகிறேன்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்
EX - முனிசிபல் கௌன்சிலர்
பழநிஸ்தலம்.

---

## சமாசாரம்.

### ஓர் அநாகரிக விவாகம்.

சென்னை திருவல்லிக்கேணியில் வசிக்கும் எழுபது வயதுக் கிழவராகிய நாராயணப்பிரசாத் என்னும் அந்தணரொருவர் தமக்குப் புத்திரப் பேறில்லாமையால் அக்குறையை நிவர்த்திக்க, ஓர் பதின்மூன்று வயதுப் பாலிகையைச் சென்ற மாதம் மணந்துகொண்டனராம். புத்திரப்பேற்றை விரும்பி இப்பரிதாபகர விவாகத்தைச் செய்துகொண்ட இவ்வயோதிக மணமகனது மனம் பொருட்பேயை விரும்பித் தங்கள் அருமைப் புத்திரியை விற்ற மணப்பெண்ணின் பெற்றோர்கள் மனங்களினும் சிறந்ததென்றே சொல்லலாம்.

### இறந்தவன் பிழைத்தான்.

ஹெண்டா என்னுமிடத்தில் பீட்டர் ஹாடி என்ற ஒருவன் சுவாசமின்றிக் கிடக்க அவனைச் சேர்ந்தவர்கள் அவன் இறந்துவிட்டானென்றெண்ணி, அவனைப் பெட்டியில் வைத்துக் கல்லறைக்குக் கொண்டுபோக, ஆங்கு அவன் திடீரெனப் பெட்டியைத் திறந்தெழுந்து வெளியே நிற்க அவனைக் கொணர்ந்தாரனைவரும் திகிலுற்றோடினர். பின்பு அவன் தான் தன் மித்திரனொருவனோடு பந்தயம்போட்டுக்கொண்டு சுவாசபந்தனஞ்செய்து செத்தவனைப்போலிருந்ததாகச் சொல்ல யாவரும் திகில் நீங்கி வியப்புற்றனர்களாம்.

## பேரிடியாற் பிறவிச் செவிட்டுத்தன்மை ஒழிந்தது.

பர்மாவிலுள்ள பாகோக் என்னும் நகரில் மழைக்கஞ்சிஓர்திண்ணையில் ஒதுங்கியுட்கார்ந்திருந்த ஓர் பிறவிச்செவிடனது செவிகளில் ஓர் பேரிடி முழக்கம்புகவே அவன் செவிட்டுத்தன்மை நீங்கிச் செவிப்புலனைப் பெற்றானும்.

## குடியரசுப் பண்டிகை.

வழக்கம்போல் இப்பண்டிகை இம்மாதம் 13 - ம் தேதி மாலை 6 - மணிமுதல் 14 - ம் தேதி இரவு 10 மணிவரையில் புதுவையில் அதி விமரிசையாய் நடைபெறும்.

## ஓர் விசேஷ சந்தானப்பேறு.

பர்பி என்னுமிடத்தில் மிஸ்டர் டி. எ ஸ்டாக் என்ற ரயில்வே ஹோட்டல் அதிகாரி ஒருவர், ஒருவர்க்குப்பின் ஒருவராக இரண்டு மங்கையரை மணந்து 29 - பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றார்.

## ஓர் விநோத பிரதி விளம்பரம்.

மைசூர் வாகமங்கலந்தாலுக்காவிலுள்ள சோதிடரொருவர் காணாமற்போன தன் பிள்ளை இருக்குமிடத்தைத் தெரிவிப்பார்க்குப் பதினைந்து ரூபாய் பரிசளிப்பதாக விளம்பரஞ்செய்தனர். இவ்விளம்பரத்தைப்பார்த்த ஒருவர், இந்தச்சோதிடர் தன் சோதிட ஞானத்தால் தானே தன் பிள்ளையிருக்குமிடத்தைத் தெரிவித்தால் இவருக்கு ஐந்து ரூபா பரிசளிப்பதாகப் பிரதி விளம்பரஞ் செய்தனராம்.

## ஓர் பெண்மணி பீ. எ. பரீட்சையிற்றேறினாள்.

மைசூர் மகாராஜா காலேஜில் வாசித்த ஸ்ரீமதி நாகம்மாள் என்ற மாது இவ்வருஷம் பீ. எ. பரீட்சையிற்றேறினாள். மைசூரில் இந்தஅம்மாளோடு நான்கு நங்கையர்கள் பீ. எ பரீட்சையில் தேறி இருக்கின்றார்கள்.

## ஓர் பெரிய ரயில்வே ஸ்டேஷன்.

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் 3 - கோடியே 60 - லட்சம் ரூபாய் செலவிட்டு ஓர்பெரியரயில்வேஸ்டேஷன் கட்டியிருக்கிறார்களாம். இந்தஸ்டேஷன் 46 பிளாட்பாரங்களும் 69 பாதைகளுமுடையதாம். இப்பாதைகளில் பிரதிதினமும் 800 வண்டித் தொடர்கள் வருகின்றனவாம் பதினாயிரம் ஜனங்கள் இந்த ஸ்டேஷனில். தங்குவதற்கிடமுளதாம்

## ஏஜண்டுகள் தேவை.

கலைமகள் பத்திரிகைக்கு 100 சந்தாதாரர்களைச்சேர்க்கும் ஏஜண்டுகளுக்கு ரூபாய் 10 கமிஷன் கொடுக்கப்படும். அங்ஙனம் சேர்க்கப்படும் சந்தாதாரர்கள் தமது சந்தாவை முற்பணமாகப் பத்திராதிபருக்கே நேராக அனுப்பிவிடவேண்டும்.

ப - ர்.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி - சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

---

பி·சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

17. மேகரண மருந்து:— இதை வெள்ளைத்துணியில் தடவி ரணங்களின் மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியின், பிளவை, கிரந்தி, மேகவெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள், ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணு 8, இந்தியாவிலும், பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு, அணு 5 பிராத்தியேகம்.

18. கண்டசுத்தி மாத்திரைகள்:— டைரக்ஷனில் சொல்லிய படி இதை சாப்பிட்டு வந்தால் .தொண்டை கட்டு, தொண்டை கம்முதல் நீக்குவதும் அன்றி, இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத்தரும். சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம், எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும், குரல் கம்மாது. இனிமையான ஓசையைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1 முதல் 6சீசாக்கள் வரையில் பாங்கிங்கு தபால் முதலிய சிலவு அணு 5 பிரத்தியேகம்.

19. சுகந்தஸ்நாநப் பொடி:—இந்த வாசனைப்பபொடியைதினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நாநம் செய்து வந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து, தேமல், அறிப்பு, சொரி சிரங்கு, கற்றாழைநாற்றம் கை கால் எரிச்சல், மேககாங்கை, சரீரவராக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும், அனேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும் நல்ல வாசனையும், காந்தியும், காந்தியும், லக்ஷ்மீகாரமும், ஆரோக்கியமு முண்டாகும், அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணு 8 வி. பி. சிலவு அணு 3 பிரத்தியேகம்.

20. சஞ்ஜீவிமாத்திரைகள்:— இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்

றுப்பிசம், வயிற்றுவலி,தெற்குத்திக்கணை முதலிய நோய்கள்தீரும்.அரைக். குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில்அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரததியேகம்.

21. கோரோஜனை மாத்திரைகள்:—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம்,இளைப்பு வலி, மயக்கம்,தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால் மாந்தம், முதலிய எல்லா மாந்தங்களும் கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலசலக்கட்டு, முதலியதுகளும், மலை சுரம், முறைசுரம் முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு அணா 10. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

22. கரப்பானுக்கும் சொரிசிரங்குக்கும் மருந்து:—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்கு மட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொரி, சிரங்கு,வரட்டுச்சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு, அதிக நமைச்சலையும், தொந்திரவையும், தருகின்ற எவ்வித கரப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

23. கேசசுவாசனி:—உசிதமான வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும் நெருக்கமாகவும், கறுப்பாகவும், வளரும். கண்கள் குளிரும் தலைநோய் போகும், மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும்,இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்,
ஆயுர்வேத ஔஷதசாலை,
ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்
கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

MY ADDRESS
P. SUBBAROY
**Ayurvedic Pharmacy,**
Sri Venkatesa Perumal Koil
Sannathy, TANJORE.